வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2775/ஆ2/2023 நாள். 05.10.2023

பொருள்: பள்ளிக்கல்வி வேலூர் மாவட்டத்தில் 2023 2024 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுத்துறை சார்பில் அன்றாட வாழ்வில் உயர் தகுதியைபேணுவதற்கு குறித்து விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துவதுபோல் தகுதி கலாச்சாரத்தை இளைஞர்கள் இடையே புகுத்துவதற்கு மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டபோட்டி நடத்துதல் சார்பு

பார்வை: வேலூர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பத்திரிகை செய்தி குறிப்பு நாள்.04.10.2023

-------

வேலூர் மாவட்டத்தில் 2023 2024 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுத்துறை சார்பில் அன்றாட வாழ்வில் உயர் தகுதியை பேணுவதற்கு குறித்து விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துவதுபோல் தகுதி கலாச்சாரத்தை இளைஞர்கள் இடையே புகுத்துவதற்கு மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டபோட்டிகள் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

அதன்படி வேலூர் மாவட்டத்தில் வருகிற 7 ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருத்திட்ட வளாகத்தில் அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்ட போட்டி நடைபெற உள்ளது. போட்டிகள் 2 பிரிவுகளாக ஆண்கள் / பெண்கள் என தனித்தனியாக நடத்தப்பட உள்ளது. ( முதல் பிரிவில் 17 வயது முதில் 25 வயது வரை) உள்ள 1.1.1998 முதல் 1.1.2007 வரை பள்ளி கல்லூரி மாணவ / மாணவிகள் அரசுப் பணியாளர்கள் மற்றும் பொது பிரிவினர்களுக்கும் 25க்கு மேல் ( 31.12.1997 முன்னர்) உள்ள அரசு அலுவலர்கள் பொதுப் பிரிவினர் விளையாட்டு ஆர்வலர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பாலர்களும் கலந்து கொள்ளலாம்.

மேலும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் வீராங்கனைகள் தங்களுடைய ஆதார் அட்டை நகல் கட்டாயம் கொண்டு வந்து பதிவு மேற்கொள்ள வேண்டும். போட்டியில் பங்கேற்பவர்கள் தங்கள் பதிவினை மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் ( நாளை முதல் 05.10.2023 ) வியாழன் கிழமை நேரடியாக பதிவு மேற்கொண்டு கலந்து கொள்ளலாம் பதிவு மேற்கொள்ள கடைசி தேதி 7 ந்தேதி காலை 6.00 மணி வரை

Scanned with CamScanner

இப்போட்டிகள் காலை 7.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தொடங்கப்படும் கலந்துகொள்பவர்கள் 45 நிமிடத்திற்கு முன்னதாக போட்டி நடைபெறும் இடத்தில் தங்களது பதிவை உறுதி செய்ய வேண்டும் போட்டியில் வெற்றி பெறம் முதல் 3 இடங்களுக்கு பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும். எனவே மேற்கண்ட போட்டிகளில் வேலூர் மாவட்டத்தில் படிக்கும் பள்ளி கல்லூரி மாணவ / மாணவிகள் அரசு அலுவலர்கள் பொது பிரிவினர்கள் விளையாட்டு ஆர்வலர்கள் பெருமளவில் கலந்துகொண்டு பயன்பெற தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட தகவல்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரை அணுகவும். தொலைபேசி எண்.7401703483. என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். பள்ளி விளம்பலப் பலகையில் ஒட்டி வைக்கவும். மாணவர்களிடம் மற்றும் பொது மக்களிடம் தகவல் தெரிவிக்க அனைத்துவகை தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்துவகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.
அரசு / நகராட்சி / மெட்ரிக் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்.
வேலூர் மாவட்டம்.

Scanned with CamScanner